பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**14 07 2026** **TUESDAY** **6.30 PM**

மாநிலச்செய்திகள்

தலைப்புச் செய்திகள்

**1)** பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு ரயில்வேத்துறை சீர்திருத்தங்களை ஊக்குவித்து வருவதாக மத்திய அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

**2)** தமிழகத்தில் நிறைவேற்றப்பட்டுவரும் ஜவுளித் திட்டங்களுக்கு நிதி ஒதுக்குமாறு மாநில கைத்தறித்துறை அமைச்சர் திரு விஜய் பாலாஜி, மத்திய அரசிடம் வலியுறுத்தியுள்ளார்.

**3)** கலை அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர் அல்லாத பணியாளர்கள் பணியிட மாறுதல் கோரி நாளை முதல் இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம் என்று மாநில அரசு கூறியுள்ளது.

**4)** தவெக அரசின் முறையற்ற நிர்வாகத்தால் விவசாயிகள் பிரச்சினைக்கு தீர்வு ஏற்படவில்லை என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்

**5)** இந்தியாவுக்கு எதிரான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து முதலில் பேட் செய்து வருகிறது.

-- இனி விரிவான செய்திகள் —

<<<<<><>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு ரயில்வேத்துறை சீர்திருத்தங்களை ஊக்குவித்து வருவதாக மத்திய அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், ரயில்வேத் திட்டங்களுக்குத் தேவையான நிலம் கையகப்படுத்தும் பணிகளை நிர்வகிக்க ''ரயில் பூமி'' என்ற பிரத்யேக இணையதளம் தொடங்கப்படும் என்று கூறினார்.

சரக்கு ரயில் பெட்டகங்களில் உரங்கள் கொண்டு செல்ல அனுமதிக்கப்படும் என்று அவர் கூறினார்.

மேலும், அனல்மின் நிலையங்களில் வெளியேற்றப்படும் நிலக்கரி சாம்பல் ரயில் சரக்கு பெட்டகங்களில் கொண்டு செல்லப்படுவதன் மூலம் சுற்றுச்சூழல் பாதிக்கப்படாது என்று அவர் தெரிவித்தார்.

தொழில் நிறுவனங்களின் தேவைக்கேற்ப சரக்கு ரயில் பெட்டிகளின் வடிவமைப்பில் மாற்றம் கொண்டுவரப்படும் என்றும் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறினார்.

<<<<<><>>>>>

மத்திய அரசின் உதவியுடன் தமிழகத்தில் நிறைவேற்றப்பட்டுவரும் ஜவுளித் திட்டங்களுக்கு நிதி ஒதுக்குமாறு மாநில கைத்தறித்துறை அமைச்சர் திரு விஜய் பாலாஜி, மத்திய அரசிடம் வலியுறுத்தியுள்ளார்.

மத்திய ஜவுளித்துறை அமைச்சர் திரு கிரிராஜ் சிங்கை, அமைச்சர் நேரில் சந்தித்து தமிழகத்தின் கோரிக்கைகள் அடங்கிய கடிதத் தை அளித்துள்ளார்.

ஈரோடு மாவட்டத்தில் பிரத்யேக விசைத்தறி பூங்கா, காஞ்சிபுரத்தில் பட்டு ஏற்றுமதி வர்த்தக மையம், ஆரணி கைத்தறிப்பட்டு பூங்கா இரண்டாவது கட்டப்பணிகள் ஆகியவற்றுக்கு நிதி ஒதுக்கீடு செய்யுமாறு அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

கைத்தறிப் பொருட்களுக்கு சரக்கு மற்றும் சேவை வரியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டும் என்றும், ஜரிகைக்கு 15 விழுக்காடு மானியம் வழங்க வேண்டும் என்றும் அந்த கடிதத்தில் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஈரோடு, நாமக்கல் மற்றும் கரூர் பகுதிகளில் நவீன பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைப்பதற்கு நிதியுதவி வழங்குமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்

ஜவுளி ஏற்றுமதியை அதிகரிக்க அரசு மற்றும் தொழில்துறை பிரதிநிதிகள் வெளிநாட்டுப் பயணம் மேற்கொள்ள நிதியுதவி

வழங்குமாறும் மத்திய அரசிடம் திரு விஜய் பாலாஜி கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<><>>>>>

பழனி கோவிலுக்கு சொந்தமான நிலத்தை அதன் பின்புலம் தெரியாமல் தவறாக பதிவு செய்த சார் பதிவாளர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக இந்த சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு ரமேஷ் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று மாநில பத்திரப்பதிவுத்துறை அமைச்சர் திரு லோகேஷுடன் செய்தியாளர்களை சந்தித்த அவர், பழனி விவகாரத்தில் தவறான தகவல்கள் பரப்பப்படுவதாக கூறினார்.

கோவில் நிலத்தை மாநில அரசு எக்காரணம் கொண்டும் யாருக்கும் விட்டுக்கொடுக்காது என்றும் திரு ரமேஷ் உறுதிபட தெரிவித்தார்.

<<<<<><>>>>>

பழனி கோவில் நிலம் தனியாருக்கு வழங்கப்பட்டதில் ஊழல் நடைபெற்றுள்ளதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

நெல்லையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், கோவில் நிலங்களை தனிநபர்களின் சொத்தாக மாற்ற முடியாது என உச்சநீதிமன்றம் பல முறை தீர்ப்பளித்திருந்தது என்று குறிப்பிட்டுள்ள

அவர், பழனி அடிவாரத்தில் 50 கோடி ரூபாய் மதிப்பிலான நிலம் இம்மாதம் 6-ஆம் தேதி தனியாருக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

தவெக ஆட்சியில் லஞ்சம் இல்லை என முதலமைச்சர் திரு விஜய் கூறுவது ஏற்றுக்கொள்ளும் வகையில் இல்லை என்று அவர் தெரிவித்தார்.

தமிழகத்தில் கடுமையான மின்வெட்டு நிலவுவதாக கூறியுள்ள அவர், திருவள்ளுர் உள்ளிட்ட பகுதிகளில் ஏழு மணிநேரத்திற்கு மேல் மின்சாரம் தடைபடுவதாகவும் கூறினார்.

கர்நாடக அரசு மேகதாது அணைத் திட்டத்தை விரைவுபடுத்திவரும் நிலையில், காவிரி நீரை பெறுவதில் தமிழகத்திற்கான உரிமையை நிலைநாட்டுவதற்கு தவெக அரசு உரிய அழுத்தம் கொடுக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

மேட்டூர் அணை இவ்வாண்டு ஜூன் 12-ஆம் தேதி திறக்கப்படாததால், டெல்டா மாவட்ட விவசாயிகள் சாகுபடி பணிகளை மேற்கொள்ள இயலாமல் தவிப்பதாக கூறினார்.

தமிழகத்தில் சட்டம் — ஒழுங்கு சீர்குலைந்துள்ளது என்றும், பெண்களுக்கு எதிரான குற்றங்களை கட்டுப்படுத்த மாநில அரசு தவறிவிட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

மத்திய அரசின் நிதியுதவியில் செயல்படும் பல திட்டங்களுக்கு மாநில அரசு பெயர் மாற்றம் செய்துள்ளதாகவும் திரு நயினார் நாகேந்திரன் கூறினார்.

<<<<<><>>>>>

தவெக அரசின் முறையற்ற நிர்வாகத்தால் விவசாயிகள் பிரச்சினைக்கு தீர்வு ஏற்படவில்லை என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்

சேலம் மாவட்டம் ஓமலூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், காவிரி பிரச்சினையில் உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பின்படி, காவிரி ஆற்றில் எந்தவொரு கட்டுமானத்தையும் மேற்கொள்ளக்கூடாது என தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளதை மாநில அரசு முறையாக புரிந்துகொண்டு செயல்பட வேண்டும் என்று கூறினார்.

தமிழகம் உள்ளிட்ட காவிரி பாசன மாநிலங்கள் பாதிக்காத வகையில் கிடைத்துள்ள இந்த தீர்ப்பை உறுதி செய்யும் வகையில் மேகதாதுவின் குறுக்கே அணை கட்டும் கர்நாடகத்தின் முயற்சிக்கு முற்றுப்புள்ளி வைக்க உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

தவெக அரசு காவிரி நடுவர் மன்றத்தின் மூலம் தீர்வுகாணப்படும் என்று கூறியிருப்பது, டெல்டா மாவட்ட விவசாயிகளுக்கு அச்சத்தையும்,

குழப்பத்தையும் ஏற்படுத்தியுள்ளதாகவும் திரு எடப்பாடி பழனிசாமி கூறினார்.

<<<<<><>>>>>

அரசு கலை அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர் அல்லாத பணியாளர்கள் நாளை முதல் இம்மாதம் 24-ஆம் தேதிவரை பணியிட மாறுதலுக்கான பொதுக்கலந்தாய்வுக்கு விண்ணப்பிக்கலாம் என்று மாநில உயர்கல்வித்துறை அமைச்சர் திரு விஸ்வநாதன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், கல்லூரிக் கல்வி இயக்ககம், அனைத்து மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்ககங்களில் பணிபுரியும் ஆசிரியர் அல்லாத பணியாளர்கள் இவ்வாண்டு பணியிட மாறுதலுக்காக விண்ணப்பிக்கலாம் என்றும் கூறியுள்ளார்.

பணியிட மாறுதலுக்கான விண்ணப்பங்களை **nonteaching.dcetransfer.in** என்ற இணையதள முகவரியில் விண்ணப்பிக்கலாம் என்றும், கல்லூரி கல்வி இயக்கக ஆணையர் தெரிவித்துள்ளார்.

<<<<<><>>>>>

தமிழகத்தில் கடந்த திமுக ஆட்சியின்போது மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுப்பணித் திட்டங்களை தவெக அரசும் தொடர்ந்து

மேற்கொள்ள வேண்டும் என்று திமுக தலைவர் திரு. மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக, அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், தமிழக வரலாற்றையும், பண்பாட்டையும் குறைத்துக்கூறியும், வரலாற்றை திரித்தும் கூறப்படும் வாதங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில், தமிழர் தொன்மையின் தடங்களை பாதுகாக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

தமிழ் தொன்மையின் உண்மை சான்றுகளோடு வெளிப்பட்டுக் கொண்டிருக்கும் கீழடி, பொருநை அகழாய்வுகளை போன்று இன்னும் மறைந்திருக்கும் பலவற்றை வெளிக்கொண்டுவந்து புதிய வரலாறு படைத்திட வேண்டும் என்றும் திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

<<<<<><>>>>>

தமிழகத்தில் அடுத்த நான்கு நாட்களில் நான்கு டிகிரி செல்சியஸ் வரை வெப்பநிலை உயரக்கூடும் என்று வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

***(Sound Byte — வி ஆர் துரை - 22 Sec. )***

<<<<<><>>>>>

*மாவட்டச் செய்திகள்*

மதுரை காந்தி நினைவு அருங்காட்சியகத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் புனரமைப்பு மற்றும் நவீன மேம்பாட்டுப் பணிகளை மாவட்ட ஆட்சியர் திரு நிஷாந்த் கிருஷ்ணா இன்று நேரில் பார்வையிட்டார்.

--------------

பெரம்பலூர் மாவட்டத்தில் மக்கள் தொகை கணக்கெடுப்புக்கான பணிகள் குறித்த விழிப்புணர்வு பேரணியினை ஆட்சியர் திருமதி ஷரண்யா அறி இன்று தொடங்கிவைத்தார்.

----------------

நாமக்கல் மாவட்டம், எலச்சிபாளையம் பகுதிகளில் சுமார் 11 கோடி ரூபாய் மதிப்பில் நடைபெற்றுவரும் வளர்ச்சித் திட்டப்பணிகளை ஆட்சியர் திரு. மதுபாலன் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

--------------

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலத்தில் பண்ணாரி அம்மன் கோவிலில் ஆனி அமாவாசை தினத்தை முன்னிட்டு சிறப்பு பூஜைகள் இன்று நடைபெற்றன.

--------------

சென்னை சிந்தாதிரிபேட்டையில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள கிடங்கினை பார்வையிட்டு அதன்

பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து தேர்தல் ஆணையத்தின் செயலாளர் திரு சஞ்ஜீவ் குமார் பிரசாத் இன்று ஆய்வு செய்தார்.

<<<<<><>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

இந்தியாவுக்கு எதிரான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் முதலில் பேட் செய்துவரும் இங்கிலாந்து சற்றுமுன்வரை **38** ஓவரில் **6** விக்கெட் இழப்பிற்கு **190** ரன் எடுத்துள்ளது.

பர்மிங்ஹாமில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் டாஸ் வென்ற இங்கிலாந்து முதலில் பேட் செய்ய தீர்மானித்தது.

-----------------

**19** வயதுக்குட்பட்டோருக்கான இலங்கைக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாம் நாளான இன்று, இந்தியா முதல் இன்னிங்ஸில் ஆட்டநேர இறுதியில், விக்கெட் இழப்பின்றி **186** ரன் எடுத்துள்ளது.

**Galle**-ல் நடைபெற்றுவரும் இப்போட்டியில், இலங்கை முதல் இன்னிங்சில் **424** ரன் எடுத்துள்ளது.

**<<<<<>END<>>>>>**